
# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 வைகாசி 23 | 5-6-48 சனிக்கிழமை | வீச்சு 41

ஆசிரியர்கள்:





இந்தி எதிர்ப்புப் போரில்
உயிர் நீத்த
தியாகி நடராசன்

**பிரஞ்சு நாட்டுக் கதை:**

# மூன்று கதைகள்—ஒரு பாடம்!

[புதுவைச் சிவம்]

**பேய் உண்டா? இல்லையா? பழைய கேள்வி. மிகவும் பழைய கேள்வி. இந்தக் கேள்வி விவாதமாகிறது, இரு பிரஞ்சுத் தோழர்களிடையே! ஒருவன் உண்டு என்கிறான். மற்றவன் இல்லை என்கிறான். உண்டு என்பவனின் நம்பிக்கையை மாற்ற, இல்லை என்பவன் ஒரு கதை கூறுகிறான். அது இது:**

குளிர் காலம்! ஓர் நாள் இரவு என் தகப்பனாரும், அவர் தம் நண்பர்களும், பிரான்ஸ் தேசத்துக் கிராம வாசிகள் பலரும் எங்கள் வீட்டில் கூடி இருந்தார்கள். பாமர மக்கள் உண்மையென நம்பி வரும் பேயைப்பற்றியும், இறந்தவர் திரும்பி வருவதைப் பற்றியும் அச்சமயம் பேசத் தொடங்கினார்கள். உடனே என் தாயார் "இதைப் பற்றி நான் ஒரு கதை சொல்ல வேண்டியிருக்கிறது" என்றார்; அங்கிருந்த டாக்டர் ஒருவர் "நான் ஒரு கதை சொல்லுகிறேன்" என்றார். என் தந்தையும் "எனக்கொன்று தெரியும்" என்றார்.

உடனே அங்கிருந்தோர், "சரி, நீங்கள் மூவரும் மூன்று கதைகள் சொல்லுங்கள்; அதில் யார் கதைதான் மிகப்பயங்கரமுள்ளதென்று பார்ப்போம்" என்றனர். முதன் முதலாக எனது தாயாரையே பேசும்படி கேட்டுக் கொண்டனர். அவரும் முன் வந்து பேச ஆரம்பித்தார்.

## தாயார் சொன்ன முதல் கதை

நான் எனது சிறு வயது முதல் பேய்களைப் பற்றிய விஷயங்களென்றால் மிக ஆவலாகக் கேட்பேன். ஏனெனில், பேய் விஷயத்தில் பயமொரு புறமிருக்க, பேய் உண்டா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மிக வேட்கையுடையவளாயிருந்தேன்.

## உரோமமுள்ள பேய்!

மதாம் தெசுலியேர் (Madan Teshouliere) என்பவள் ஒரு கவி. பதினெட்டாம் நூற்றாண்டில்பெயர் பெற்ற பெண் மணிகளில், இவளும் ஒருவள் மிகுந்த அன்புடையவள்; புத்திசாலி! அவள் ஒருநாள் கிராமத்திலுள்ள தனது நேசியைப் பார்த்து வருவதற்காகச் சென்றிருந்தாள். நேசியின் பழைய வீடு வெறுமனே சாத்தப் பட்டிருந்தது. அதில் யாரும் குடியில்லை. அதற்கப்புறமுள்ள ஓர் வீட்டில் தனது நேசி இருந்து வருவதையறிந்து அங்குச் சென்றாள். தெசுலியேர் வருவதையறிந்து நேசி, அன்போடு வரவேற்றாள். இருவரும் மிகுந்த சந்தோஷத்தோடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். இதற்கிடையில், "ஏன் அந்த வீட்டை விட்டு இங்கு வந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள் தெசுலியேர்.

இதற்கு நேசி, "அவ் வீட்டில் ஒரு பேய் இருக்கிறது; அது இரவில் உலவுகிறது. எனது வேலைக்காரி நிலா வெளிச்சத்தில் பார்த்தாளாம்! அதுசமயம் அந்தப் பேய் "உம்" என்ற பெருஞ் சத்தம் செய்ததால், வேலைக்காரி பயந்து விட்டாளாம். அதுமுதல் அவ்வீட்டில் யாரும் செல்வதற்குத் துணிந்தாரில்லை. அதனால் தான் அவ்வீட்டைக் காலி செய்து விட்டேன்" என்றாள்.

இவ் வார்த்தையைக் கேட்ட தெசுலியேர் அலட்சியப் புன்னகை கொண்டு, "நான் பேய் விஷயத்தில் நம்பிக்கையற்றவள்; அதோடு மட்டுமல்ல, மதத்தையும் நம்புவதில்லை. அல்லாமலும், இறந்தவர்கள் உயிரோடிருப்பவர்களைப் பயமுறுத்தும் மேற்சொன்ன சக்தியுடையவர்கள் என்பதையும் நான் நம்பவில்லை" என்றாள்.

இதைக்கேட்ட நேசி கடகடவெனச் சிரித்து, "தெசுலியேர்!

நல்ல சந்தர்ப்பம்! அப்படியா
உன் தைரியத்தைக் காட்ட, நீ
றிரவு அந்த வீட்டில் படு
கொள்வாயா?" என்றாள்.

"ஆகா! தடையொன்றுமி
அப்படி ஏதாகிலும் நேர்ந்
அவ் விஷயம் நான் கவி எழு
தற்குப் பயன் படும். இப்பொ
அவ்வீட்டைச் சுத்தம் செய்து,
டில் ஒன்று போட்டு வையுங்க
என்றாள் தெசுலியேர்.

நேசியின் கட்டளைப்படி வே
யாட்கள் அவ்வீட்டைச் சுத்
செய்து, கட்டில் ஒன்றும் போ
வைத்தார்கள். இரவு வந்
தெசுலியேர் அவ்வீட்டிற்
சென்று கட்டிலில் நிம்மதியா
படுத்துத் தூங்கினாள்.

நடு நிசி! கதவு திறக்கும் சப்
கேட்டது, உடனே, "யார
என்றாள் தெகலியேர்.

ஓர் உருவம் மௌனமாக அ
முன் வந்தது! கட்டிலுக்கரு
இருந்த மேஜை கீழே தள்ளப்
டது! கட்டில் திரைகள் ச
துடன் திறக்கப்பட்டன! இ
கண்டதும் தெசுலியேர் சி
பயந்தாள். யாரேனும் வே
மென்றே கேலிக்காக இப்
செய்கிறார்களோ எனச் சந்தே
தாள். உண்மையானால், அ
வம் தொடக்கூடியதுதானா
பதை அறிய எண்ணித் தன்
களை அதன் முன் நீட்டி
இதைக் கண்ட அவ்வுருவர்,
மார்க்கமாகப் போகத் தலைப்
டது. உடனே தெசுலியேர்,
டிலை விட்டிறங்கித் தடவிக்கொ
டேபோய், நீண்ட உரோம
ளடர்ந்த அதன் இரண்டு காது
யும் கெட்டியாய்ப் பிடித்
கொண்டாள்!

தெசுலியேர் அவ் வுருவத்
காதுகளைப் பிடித்துக்கொண்
லும், அவள் உள்ளம் என்ன
பயத்தினால் துடித்துக்கொண்டி
தது! பாவம்! என்ன செய்வ
தெசுலியேர்! எப்படிப்பட்ட
ரும் "பேய்" என்றால் ஐம்புல
அடங்கி ஒடுங்கிப்போகையில்,
லியேர் பயந்தது ஆச்சரியமா?

பேய் விஷயத்தில் நம்பிக்கை
றவள், பேய்க்கு ஏன் பய
வேண்டும் என்று கேட்க
காரிருளில் இன்னதெனத்

(11-ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகம்—மரணப் படுக்கையில்!

காரணமின்றிக் கைது!
விசாரணையின்றிக் காவல்!
கால வரையறை இன்றிச் சிறை வாசம்!

கைதி, இருக்கும் இடத்தை நாட்டுக்குத் தெரிவிக்கா
லே அவரைக் கூண்டில் அடைப்பது!
கைது செய்யபபடுவது ஏன் என்பதை கைதிக்கும்
தெரிவிப்பதில்லை! நாட்டுக்கும் தெரிவிப்பதில்லை!
சட்டமன்றத்திற்கும் தெரிவிப்பதில்லை! நீதி மன்றத்
திற்கும் தெரிவிப்பதில்லை! எதிர் வழக்காட, கோர்ட்
டுக்குப் போக, நீதியின் துணையை நாட, சட்டத்தை
உதவிக்கு அழைக்க, நியாயத்தை துணைக்கொண்டு
போராட, பொது மக்களிடம் நீதி கேட்க வசதி தருவ
தில்லை. இருக்கும் வசதிகளையும் இருக்க விடுவதில்லை!
தெருவில் போய்க்கொண்டே இருக்கும்போது
வரும் கைது செய்யப்படலாம். கொண்டுபோய்
சிறையில் வைக்கப்படலாம். விசாரணை கிடையாது!
வழக்கு கிடையாது! ஏன் என்று கேட்க எவருக்கும்
உரிமை கிடையாது! சர்க்கார் சித்தம் எத்தனை நாட்க
ளுக்கு அவர்களை உள்ளே வைத்துப் பார்க்க விரும்
புகிறதோ அத்தனை நாட்கள் அவர்கள் உள்ளே
இருக்கவேண்டியதுதான்!

இது அடுக்குமா என்று கேட்டால் கேட்பவர்க்
குத் தண்டனை! இது முறை அல்லவே என்று கூறி
டில் கூறிடும் பத்திரிகையின் ஜாமீன் பறிமுதல்! இந்த
சுதந்திரயத்தைக் காணவோ காலமெல்லாம் கடும்போ
ரிட்டு தியாகத் தீயில் குதித்தெழுந்து ஏகாதிபத்தி
யத்தை எதிர்த்து ஒழித்தோம் என்று எதிர்மொழி
யினால் பேசிடும் தொண்டருக்கும் அவருக்குச்
சேரு துணியோ தங்க நிழலோ இடமோ தெரிந்தோ
தெரியாமலோ தர முந்திடும் எவருக்கும் சிறை! 2000-ரூ
அபராதம்! நாடு, இன்றுள்ள பயங்கரமானநிலை இது!
புதிய பத்திரிகையா?-எடு 5000ரூ. ஜாமீன்! பழைய
பத்திரிகையா? மூடு அலுவலகத்தை! மூட முடியாதா?
தொழிலைச் விட்டு மூடச் சொல்கிறேன்!—இவை,
நாள், அரசியலார் தொடுக்கும் பாணங்கள்!

ம்ம் என்றால் சிறை வாசம்! ஏன் என்றால் வன
வாசம்! உம் என்றால் அபராதம்! நன்றல்லவே என்
றால் நன்னடக்கை ஜாமீன்!—இது, ஆளவந்தார்கள்
களைப்பின்றி ஆயாசமின்றி-சலிப்பின்றி சங்கடமின்றி
தொடர்ச்சியாக வாசித்து வரும் பரணி.

விசாரணையின்றிக் காவல் என்ற கொடுமையை
எதிர்த்துப் போராட, கொடுமைக்கு உள்ளானவர்
க்கு, இதுவரை இருந்து வந்த ஒரே ஒரு ஆயுதம்
ஹேபியஸ் கார்பஸ்! அதாவது சர்க்காருடைய
நடவடிக்கை எதிர்த்து உயர் நீதி மன்றத்திற்கு மனுச்
செய்து கொள்ளும் உரிமை! அந்த உரிமையும் பறிக்
கப்பட்டுவிட்டது, அண்மையில் சர்க்கார் பிறப்பித்
துள்ள உத்தரவால்.

இன்று, நாட்டில், ஜனநாயகம் இல்லை! எதேச்
சாதிகாரம்தான் இருக்கிறது. மக்களுக்காக மக்க
ளால் நடத்தப்படும் மக்கள் ஆட்சி இல்லை! மக்கள்
உரிமையைத் தட்டிப் பறிப்பதற்காக மக்கட் பகைவர்
களால் நடத்தப்படும் மக்கள் நன்மைக்கு முற்றிலும்
மாறுபட்ட பாசிச ஆட்சிதான் இருக்கிறது. உரிமை
உரிமை உரிமை என்று உரத்த குரலில் உலகறியக்
கூவி பிரிட்டானியத்தின் பிடர் பிடித்து உலுக்கிய
வர்களின் கரத்திலேதான் சர்க்கார் காரியாலயத்தின்
திறவுகோல் இருக்கிறது. ஆனால் அந்தத் திறவுகோல் மக்கள் உள்ளத்தைத் திறக்கவில்லை. இட்டதே சட்டம் நினைத்ததே சாதனை என்ற சர்வாதிகார மனப்போக்கு மாளிகையைத்தான் திறந்து வைக்கிறது.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய திருப்பூர் குமரன்களின் வழிவந்தவர்கள்தான் இன்று ஏகாதிபத்தியப் பாதையில் செல்கின்றனர்.

அடக்கு முறையா—அடலேறு என அதை நான் எதிர்த்து நிற்பேன் என்று வீர உரை புகன்று வெஞ்சமர் தொடுத்த மாவீரர் சிதம்பரனார் பரம்பரைதான் இன்று அடக்குமுறை ஒன்று தவிர வேறு வழி யான் அறியேன் பராபரமே என்று பராபரக் கண்ணி வாசிக்கத் தொடங்கி இருக்கிறது.


எந்த பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி தடியடிக்குள்ளாகித் தலை சாய்ந்து வீழ்ந்தாலும் வீழ்வேன், வெள்ளைப் பரங்கியர் ஆணைக்குக் கீழ்ப்படிய மாட்டேன் என்று நெஞ்சு நிமிர்ந்து நின்று கூறினாரோ, அதே லாலா லஜபதியின் தொண்டர்கள் தோழர்கள் என்று சொந்தம் பாராட்டுபவர்கள் தான், இன்று, எந்தத் தடியடி அவரது தலையைச் சாய்த்து உயிரைப் பறித்ததோ அதே தடியடியை தம்மை எதிர்க்கும் மக்கள்மீது செலுத்த முனைந்து விட்டனர்.

ஆம்! இன்றைய ஆளவந்தார்கள் ஜனநாயகத்தை மரணப் படுக்கையில் கிடத்தி விட்டார்கள்! மக்கள் ஆட்சி என்ற உயரிய தத்துவத்தைச் சிறைச்சாலைக்குள் தள்ளி வெளிக்கதவை வேகமாக இழுத்துச் சாத்தி தாளிட்டுப் பூட்டும் இட்டுவிட்டார்கள்! சுதந்தரம் என்ற சுடர்விளக்கை, அவர்கள், அந்தோ, திடுமென அணைத்துவிட்டார்கள்! இதற்கு முன்பே, அவர்கள், அந்தச் சுடர் விளக்கு எரிவதற்கான எண்ணெயைக் குறைத்து வந்தார்கள், திரியின் நீளத்தை வெட்டிக் குறைத்து வந்தார்கள், திரியின் பிரிகளில் இரண்டொன்றை இழுத்து அணைத்து வந்தார்கள், இன்றோ விளக்கையே அணைத்துவிட்டார்கள். சுதந்தர ஜோதி மறைந்து விட்டது! எங்கும் பாசிச இருள் நிறைந்து விட்டது!

சர்க்கார் சென்ற கிழமை பிறப்பித்துள்ள அடக்கு முறை அவசரச் சட்டம் மக்கள் உரிமை என்னும் உயர் பொருளையே நாட்டு வாழ்க்கை என்னும் பொன்னுபரணத்திலிருந்து கல்லி எறியும் அளவுக்குக் கொடுமை நிறைந்தது.

**"கோர்ட்டுகளுக்கே அதிகாரம் இல்லாமல் எல்லா அதிகாரங்களையும் அரசியலாரே எடுத்துக்கொள்வது என்பது பாசிஸ்ட் ஆட்சியில்தான் கொண்டுபோய்விடும். ஹிட்லரும் முதலில் இப்படித்தான் ஆரம்பித்தார்."** என்று வடநாட்டு ஹிதவாதா பத்திரிகையின் ஆசிரியர் அண்மையில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவது உண்மை! பயங்கரமான உண்மை! ஆளவந்தார்களின் போக்கு உண்மையிலேயே நாட்டை பாசிசப் படுகுழிக்கு அழைத்துச் செல்வதாகத்தான் இருக்கிறது. உலகப்போர் மிக உக்கிரமாக நடந்துகொண்டிருந்த அந்தக் காலத்தில் இல்லாத இவ்வளவு கொடுமையான சட்டங்கள், ஏகாதிபத்திய வெறியின் நடமாடும் சின்னம் வின்ஸ்டன் சர்ச்சிலிடம் இந்த நாடாளும் உரிமை முடங்கிக் கிடந்தபோதுகூட பிறப்பிக்கப்படாத இத்துணை ஆபத்தான அவசரச் சட்டங்கள்,

(10-ம் பக்கம் பார்க்க)



# கடிதம்

திறந்த மடல் அல்ல இது; கட்டில் சேராத கடிதமும் அல்ல! உண்மைக் கடிதம்! **நண்பர் மணிவண்ணன்,** சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர். இன எழுச்சித் தொண்டாற்றுவதில் மட்டற்ற ஆர்வம் உடையவர். திராவிடக் கழக இலட்சியத்தையே (திராவிடநாட்டுப் பிரிவினையையே) தன்னுடைய இருதய கீதமாகக் கொண்டவர். அவருடைய நண்பர் **கோபால கிருஷ்ணன்** சென்னையில் உள்ள மற்றொரு மருத்துவக் கல்லூரியான மெட்ராஸ் மெடிகல் கல்லூரியில் பயில்பவர்; சோஷலிஸ்ட்; "ஜே. பி"யிடம் (ஜெயப்பிரகாஷ் நாராயணரிடம்) மிகுந்த "பக்தி" உடையவர். திராவிடர் கழகம் ஒரு வகுப்புவாத ஸ்தாபனமே தவிர வேறில்லை என்ற தவறான எண்ணம் படைத்தவர். அந்த எண்ணத்தைப் போக்க, தூத்துக்குடி மாநாட்டுக்கு முன்பு, மே தினத்தன்று, நம் நண்பர் மணிவண்ணன், சோஷலிஸ்ட்டு தோழர் கோபால கிருஷ்ணனுக்குத் தீட்டிய சொந்தக் கடிதம் இது. இருவரின் ஒப்புதலுடன், கடிதம், போர்வாளில் வருகிறது, தோழர் கோபாலகிருஷ்ணனைப் போன்ற நோக்கும் போக்கும் படைத்தவர்களுடைய உள்ளத்திலே திராவிடர் கழகம் பற்றி இருக்கக்கூடிய சந்தேகத் திரைகளை விலக்க!

சென்னை.
மேதினம்' 48.

**அருமை சமதர்மத் தோழர்,**
**கோபாலகிருஷ்ணருக்கு,**

வணக்கம்.

தேர்வில் தங்கள் வெற்றி கண்டு மிக மகிழ்ந்தேன். தமிழர் பணஞ் சேர்த்து "ஜே. பி." இடம் கொடுத்துவிட்டு, இப்போது சற்று இளைப்பாறிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நம்புகின்றேன்.

நீங்கள் கொண்டுள்ள ஐயப்பாடுகள் சிலவற்றை நீக்க வேண்டுமென கேட்டுக்கொண்டிருந்தீர்கள். இவைகள்பற்றி வெகு நாட்களாகவே எங்கள் தலைவர் தளபதி தோழர்களால் நாள்தோறும் பட்டினங்களிலும் கிராமங்களிலும் பேசப்பட்டுவருகின்றன. எங்கள் ஒரு சில செய்தித் தாள்களிலும், வந்துள்ளன. "இவர்கள் என்ன தான் எழுதுவார்கள்? பேசுவார்கள்? இவர்களுக்குத் தெரிந்தது வகுப்புவாதம் ஒன்றுதானே—" என்று தாங்கள் எண்ணமிடக் கூடும். அதில் வியப்புமில்லை. ஏனெனில் தங்களுடைய அன்பையும்ஆதரவையும் பெற்றிருக்கும் சோஷலிஸ்ட் கட்சியின் நிர்மாண கர்த்தாக்கள் செய்து வரும் பிரசாரமே திராவிடர் கழகம் ஒரு வகுப்புவாத மன்றம் என்பதுதானே! நீங்கள் வழக்கமாகப் படித்துவரும் பார்ப்பனப் பத்திரிகைகளாகிய ஹிந்து மெயில் மித்திரன் பாரததேவி தினமணி எல்லாம் எங்களைப் பற்றித் தங்களுக்கு அறிமுகம் செய்திருக்கக்கூடிய விதமும் வகுப்புவாத ஸ்தாபனம் என்பதுதானே! இந்தச் சூழ்நிலையிலேயே உலவ நேரிட்டுவிட்ட காரணத்தால் நீங்கள் எங்களை வகுப்பு வாதி
என்று கருத நேரிட்டது இ
கையே. ஆனால் அவர்கள் செ
களை அப்படியே நம்பிவிட்ட
கள் ஒன்றை மறந்து விட்டீர்க
கொசுக் கடியிலிருந்து தப்புவ
காகக் கொசுவலை கட்டிக்கொ
ளும் மனிதனை கொசுக்கள், வகு
வாதிகள் என்றுதானே தூற்று
ஆனால் அதனாலேயே, கொசுவ
கட்டிக் கொள்ளும் மனிதன் வகு
வாதியாகிவிட மாட்டான். இ
லையா? மூட்டைப் பூச்சிகளி
தொந்தரவிலிருந்து தன்னைக் க
பாற்றிக் கொள்வதற்காக மூ
டைப் பூச்சிகளைக் கொல்லும் ம
தைப் பயன்படுத்துபவனை மூ
டைப் பூச்சிகள், வகுப்புவாதிக
என்றுதான் அர்ச்சிக்கும்! ஆன
அவை, அப்படி அர்ச்சிப்ப
லேயே, மூட்டைப் பூச்சி ஒழி
மருந்தைக் கையாளும் மனித
வகுப்புவாதியாக மாட்டான். அ
லவா?

நாங்கள் வெகு சிலராயிருக்
பார்ப்பனரை வெள்ளையனை
கண்டித்ததை விட அதிகமா
கண்டிக்கிறோம் என்று எங்களி
குறைகாணுகின்றீர். நாங்க
பார்ப்பனர் என்னும் மக்க
பிரிவை பிறவிக்காக என்று
போதும் வெறுத்ததில்லை. ந
கள் கண்டிப்பது பார்ப்பனீ
என்னும முறையையே. "தா
பிராமணன். தனக்குக் கீழ் த
நன்மைக்காக என்றே பிறந்த
—வாழ்பவர்—வைசியர் சூத்திர
என்று கருதும் பார்ப்பனரைய
"தான் வைசியன். தனக்
தொழில் புரிய இறைவனால் பை
கப்பட்டவன் சூத்திரன்" என்
கருதும் வைசியனையும், "தா
சூத்திரன்; தனக்குக் கீழ் இருக்
பஞ்சமன் தனக்குத் தொண்டு
யவே பிறப்பிக்கப் பட்டுள்
அடிமை" என்று கருதும் "மு
னேற்றமடைந்த" சூத்திரனை
அவர்கள் கொண்ட கொள்
களுக்காகவே கண்டிக்கிறோ
தங்களுடைய உயர்ந்த தன்
யைக் காட்டுவதற்காக அவர்
வைத்துள்ள அகங்கார ஜாதி
குறிகளையே நாங்கள் வெறுக்
றோம். இவற்றை விட்டொழி
வரையே நாங்கள் எங்கள் இ
என்று கூறிப் பெருமிதம் கொ
கின்றோம். தம் பிறவி மேன்

...விட்ட பார்ப்பனரையும் நாங்
... எங்கள் கூட்டுத் தோழர்
...றே மகிழ்ச்சியோடு கூறி எங்
...டன் இணைத்துக் கொள்கிறோம்.
...ஆனால் சாதிபேதத்தை முதலில்
...டு பண்ணியவன் பார்ப்ப
...ன். ஆதலால் அதை முதலில்
...க்க வேண்டிய கடமை உடைய
...ம் பார்ப்பனனே என்று
...ங்கள் கூறிவருகிறோம். இது
...ரு? சாதி பேதத்திற்கு மூல
...ணமாய் இருக்கும் பார்ப்பனர்
... அதை விட்டொழித்தால் அவர்
...டமிருந்து அந்த மனப்பான்
...மை தொத்திக்கொண்ட மற்ற
...ர்கள் ஒரே விநாடியில் அதை
...டொழிப்பது எளிது என்று
...ங்கள் கருதுகிறோம். இது சரி
...ல்லவா? ஆணி வேர் அசைந்
...தான் பக்க வேர் அசையும்
...பது எங்கள் கருத்து. இது
...ண்மை அல்லவா? எண்ணிப்
...ருங்கள்.

...கழகப் புது உறுப்பினர் ஒரு
...ம் நானும் போனவாரம் கடை
... வழியே வந்துகொண்டிருந்
...ம். ஓர் அய்யர் எங்களை
...ருகி, பெரும் பசியாய் 'இருக்
...தென்று அணா ஒன்று வேண்டி
... நான் ஒன்றும் பேசாது ஓர்
... கொடுத்தேன். கழகப் புதுத்
...ழர் மிரண்டார். நான் சொன்
...ன் "அய்யரை அய்யர் என்ற
...ணத்தால் நாம் வெறுக்கக்
...டாது. தான் பிராமணன் அத
..., மற்ற வகுப்பினர், அவர்கள்
...மைக்காகவே, தனக்கு உதவ
...ண்டும். பிராமணர்க்கு உழைப்
... அவர்கள் கடமை. என்று
...ம் ஆரிய மனப்பான்மைக்கே
... விரோதிகள். ஆரியர்க்கு
..., பசித்தோர் எவர்க்கும்
...வது மனிதத் தன்மைக்கு
...கு" என்று கூறினேன்.

...ந்த நிகழ்ச்சி பார்ப்பனர்—
...ப்பனியம் இரண்டிற்கும்
... வேறுபாட்டையும் நாங்கள்
...ப்பது பார்ப்பனியத்தையே
... பார்ப்பனரை அல்ல என்ப
...ம் நன்கு விளக்கும்.

...நாள் நான் வெகு வேகமாக
...னுள் நுழைந்தேன். அப்
... வீட்டு வாசலில் உட்கார்ந்
..., கடும் வெய்யிலில் பெரும்
... இழுத்ததால் வியர்வைக்
... மிதந்துகிடந்த ஓர் ஆதித்
...டத் தோழர்மீது மோத

நேரிட்டது. அதைக்கண்ட என் தாய் "என்ன? கண்ணு மண்ணு ஒண்ணுமில்லையா? பறையன் மேலே போய் விழறயே" என்றார்கள். அவர்களிடமே இவ்வளவு ஆரிய மனப்பான்மை இருக்குமாயின், அதை ஏற்படுத்திய "முதல் ஜாதி"யிடம் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். திடுக்கிட்டேன். நாங்கள் ஆரிய மனப்பான்மை என்ற சொல்லால் குறிப்பிடும் சாதி அகம்பாவம் ஆரியரிடம் மட்டுமேதான் உண்டு என்பதில்லை. திராவிடரிடமும் உண்டு. நாங்கள் ஆரியத்தை வெறுக்கிறோம் என்று சொன்னால் அதன் பொருள் வர்ணாஸ்ரம மனப்பான்மை எங்கெங்கு காணப்பட்டாலும் அதை வெறுக்கிறோம் என்பதுதான். ஆரியரிடம் காணப்படும் வர்ணாஸ்ரம மனப்பான்மையை மட்டும் வெறுக்கிறோம் என்பதல்ல.

கல்லூரி நுழைவிலும் வகுப்பு வாதம் கூடாது என்கிறீர். இது, ஏதோ சில புத்தகங்களைப் படித்துவிட்டு, நடைமுறை அநுபவங்களை மறந்துவிட்டுப் பேசும் வாதமே தவிர உண்மையில் ஒப்புக்கொள்ளக் கூடியதுமல்ல. வகுப்பு பேதங்களை ஒழிக்கும் வழியும் இது அல்ல. சர். சண்முகத்தின் பட்ஜட்டைக் குறைகூற நாம் அனைவரும் ஒன்றுபட்டோம் அல்லவா? இந்த பட்ஜட் பணம் படைத்தோரை மேலும் மேலும் பணக்காரராக்குகிறது; ஏழைகளை மேலும் மேலும் ஏழைகளாக்குகிறது என்று குறை கூறினோம் அல்லவா? பணக்காரருக்கு இன்னும் அதிக வரிகள் போட்டு அவர்கள் செல்வத்தைக் குறைக்க வேண்டும், ஏழைகளுக்குப் பல்வேறு வசதிகள் செய்து அவர்கள் செல்வத்தைப் பெருக்கவேண்டும் இவ்விதமாக ஏழை பணக்காரன் இருவர்க்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவேண்டும் என்று பேசினோம் அல்லவா? இதேபோலத்தான், கல்வித் துறையிலும், கல்வி, ஒரு சிறு கூட்டத்தாரிடம் முடங்கிக் கிடக்கிறது. அதே நேரத்தில், நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களிடம் கல்வி சிறிதும் இல்லாமல் இருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வுக்கு, சமூக பழக்க வழக்கங்களும் உதவி அளிக்கின்றன.

பொருளாதார சமத்துவம் வேண்டுமானால் செல்வத்தில் உயர்ந்தவன் தாழ்த்தப்பட்டு, செல்வத்தில் குறைந்தவன்—ஏழை உயர்த்தப்பட வேண்டும். அதுபோல, கல்வியில் சமத்துவம் வேண்டுமானால், பரம்பரை பரம்பரையாக அதிக வசதிகள் அநுபவித்த காரணத்தால் கல்வித் துறையில் முன்னேறியுள்ள சிறு கூட்டத்திற்குள்ள வசதிகள் குறைக்கப்பட்டு, அந்த வசதிகள் இன்மையால் கல்வியில் மிகமிகப் பின்னணியில் உள்ள கூட்டத்தின் நிலை உயர்த்தப்படவேண்டும். பொருளாதார சமத்துவத்திற்கு வழி சோஷலிசம். கல்வி சமத்துவத்திற்கு வழி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம். ஆகவேதான் பொருளாதாரத் துறையில் சோஷலிசத்தை ஆதரிக்கும் நாங்கள், கல்வித் துறையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை ஆதரிக்கிறோம்.

வகுப்புவாதிகள், தங்கள் சூது அம்பலமாக்கப் படுகின்றதே என்று எங்களை வகுப்புவாதிகள் என்கிறார்கள். அவர்களை நம்பி நீங்களும் எங்களை வகுப்புவாதி என்கிறீர்கள். போனால் போகட்டும். ஆனால் அவர்களின் வகுப்பு வாதத்தையேனும் காண்கின்றீரா? இல்லையே! அவர்கள் வகுப்புவாதிகளாக இருக்கக்கூடும் என்றாவது ஐயப்படுகின்றீரா? அதுவும் இல்லையே. சட்டைபோடாத வரதாச்சாரி, இனாம் ஒழிப்பை எதிர்க்கும் வைத்தியநாதய்யர், மதப் பெயரையே செய்தித்தாளின் பெயராய்க்கொண்ட "இந்து" ஆசிரியர்—இவர்களைவிடவா நாங்கள் வகுப்புவாதிகள்? மார்ச் 7–இல் திருவல்லிக்கேணி கூட்டத்திற்கு வந்திருந்தீர். "உங்களுக்குக் கூடவா இவ்வளவு கூட்டம்" என்று ஆச்சரியப்பட்டு அறுபது ஆயிரம் இருக்கும் என்று மதிப்பிட்டீர். மறுநாள் இந்துவில் இக்கூட்டம் பற்றிய செய்திக்காக உங்கள் கண்ணாடியுடன் தேடினீர். கிடைக்கவில்லை. எனக்குக் கிடைத்தது வழக்கமான இடம் தெரியுமாதலால். உங்கள் "ஜே. பி." கூட்டத்திற்கு ஏப்ரலில் நீங்களும் நானும் போயிருந்தோம். பத்து ஆயிரம் என்றீர்கள். பாரததேவி தாராளமாக 20,000 என்றது. இந்து, பத்தி

(9-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

5—6—4 சனிக்கிழமை

# இந்த துரைசாமிகள்!

காலம் மாறுகிறது. மக்கள் கருத்தும் மாறுகிறது. சூழ்நிலை மாறுகிறது. சூழ்நிலையால் உருவாக்கப்படும் சமுதாய அமைப்பு முறையும் மாறுகிறது. **ஆனால் இந்த துரைசாமிகள் மட்டும் மாறவில்லை!**

மக்களை ஊட்டி வளர்க்கும் எண்ணங்கள் நாளுக்கு நாள் வேறுபடுகின்றன. சமூக ஏற்பாடுகளும் கட்டுத் திட்டங்களும் வரம்பு முறைகளும் சடங்கு — சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் வேறுபடுகின்றன. இலக்கியங்களும் கதைகளும் கட்டுரைகளும் காவியங்களும் கருத்தோவியங்களும் நாடகங்களும் சினிமாக்களும் முன் இருந்த நிலை மாறி சீர்திருத்தப் பாதை நோக்கிப் பயணம் தொடங்கி இருக்கின்றன. **என்றும் இந்த துரைசாமிகள் இருந்த இடம் விட்டுப் பெயரவில்லை!**

மச்ச புராணத்தையும் கூர்ம புராணத்தையும் காஞ்சிப் புராணத்தையும் கருட புராணத்தையும் தவிர வேறு இலக்கியம் பயின்றறியாத தமிழர் அக நானூற்றையும் புற நானூற்றையும் நற்றிணையையும் நல்ல குறுந்தொகையையும் பயிலத் தொடங்கி இருக்கின்றனர். இராமாயணத்தையும் மாபாரதத்தையுமே புரட்டிய கரங்கள் இங்கர்சாலின் எழுத்தோவியங்களையும் வால்டேரின் வீர உரைகளையும் புரட்டத் தொடங்கி இருக்கின்றன. கண்ணன் காட்டிய வழி தவிர வேறு வழி காணாத கண்கள் ரூசோ தீட்டிய திட்டங்களையும் லெனின் வகுத்த பாதைகளையும் காரல் மார்க்ஸ் கண்டுபிடித்த தத்துவங்களையும் காணத் தொடங்கி இருக்கின்றன. ஐந்து முக தேவனின் அற்புத லீலைகளையும் பன்னிருகையனின் பிறந்த வரலாற்றையுமே எண்ணிக்கிடந்த நெஞ்சங்கள் டெலிவிஷன் தோன்றிய முறையையும் மின்சார சக்தி பயன்படும் வகையையும் ரேடியோவும் சினிமாவும் டெலிகிராமும் டெலிபோனும் எப்படி வந்தன என்பதையும் எண்ணத் தொடங்கி விட்டன. **இருந்தாலும் இந்த துரைசாமிகள் மட்டும் அன்று கண்டதற்கு அறிவில்லாமலே இருக்கின்றனர்!**

அன்று, வெறும் சக்கி முக்கிக் கல்களைக் கொண்டு நெருப்பை மூட்டிவந்த மனிதன், இன்று, தீப்பெட்டிகளைக்கொண்டு நெருப்பு மூட்டுகிறான். அன்று வில்லும் வேலும் ஏந்திப்போராடிய கரங்கள், இன்று, அணுக்குண்டும் ஆகாய விமானங்களும் கொண்டு போராடுகின்றன. அன்று கட்டை வண்டியில் பயணம் செய்தவர்கள் இன்று கப்பல், ரயில், வானூர்தி, மோட்டார் என்று இத்தகு முறைகளில் பயணம் செய்கின்றனர். பனை ஓலையில் எழுத்தாணிகொண்டு கரம் நோக நோக நூல் எழுதிய காலம் போய், தானே மை சுரக்கும் பேனாக்களால் கண் கவர்வனப்புடைய வழவழப்புத் தாள்கள் மீது சொகுசாக எழுதும் காலம் வந்திருக்கிறது. நாளெல்-

லாம் ஓயாதுழைத்தாலும் மிக
சில மக்களின் தேவையையு
பூர்த்திசெய்ய முடியாத கைரா
டையும் பெருவட்டமும் போ
விறுடிக்குப் பல்லாயிரம் கெஜ
துணிகளை உற்பத்தி செய்து த
ளும் பிரம்மாண்டமான நெசவா
களும் மில்களும் தோன்றி உ
ளன. பல ஆண்டு உழைப்பு
மீது ஒரு ஓலைச்சுவடி என்ற நி
மாறி ஒரு நாள் அச்சுப் பொ
சுழன்றால் பல ஆயிரம் அழகி
நூற்கள் என்ற நிலை பிறந்துவி
டது. எங்கும் மாற்றம்! எதிலு
மாற்றம்! அனைத்திலும் புரட்
**ஆனால் இந்த துரைசாமிகள் மட்டு
முன்னைப் பழமைக்கும் முன்
பழைய நிலையிலேயே இருக்கின்றன**

மனித வாழ்க்கையின் ஒவ்வொ
துறையிலும் புரட்சிதனமா
மாறுதல்கள் விறுடிக்கு வி
ஏற்பட்டு வருகின்றன. பழை
அமைப்புகள் தகர்ந்து வீழ்
புதிய ஏற்பாடுகள் தோன்றி வ
கின்றன. பத்தாம் பசலிப்போக்
கள் கல்லறைக் கீதம் பாடிட, பு
தம் புதிய எண்ணங்கள் எழுச்சி
பாசுரம் இசைத்திடுகின்றன. வை
கம், பதுங்கும் இடம் தேடுவது
பகுத்தறிவு, ஆட்சிப் பீடம் ஏ
வதும் நித்திய நிகழ்ச்சிகளாய்வி
டன. பொருளாதார மேடு பள்ள
கள் சமன் செய்யப்பட்டு, பொ
வுடமை நிலையங்கள் எங்கெங்
எழுப்பப்பட்டு, ஓடப்பர்க
உயர்த்தப்பட்டு உயரப்பர்
தாழ்த்தப்பட்டு, இருவரும் ஒப்
பர் ஆக்கப்பட்டு, எல்லார்க்
எல்லாமும் இருப்பதான இ
நோக்கி இந்த வையம் செலுத்
படுகின்றது. எல்லாரும் ஓர் கு
எல்லாரும் ஓர் இனம எல்லா
இந் நாட்டு மன்னர் என்ற
ழிசை எங்கும் இசைக்கப்படு
றது. சாதிபேதம் என்பது கு
வைத்த தீ என்ற உண்மை உ
ரப்பட்டு பிறர்க்கு உரைக்கப்ப
நாடெங்கும் வேகமாகப் பரவி
வருகின்றது. **இருந்தாலும் இ
துரைசாமிகள் மட்டும் இவ்வ
யும் ஏற்க மறுத்துவிட்டு கி.மு. 10,
லேயே (காட்டுமிராண்டிக் கா
லேயே) உலவுகின்றனர்!**

இந்த துரைசாமிகள் ஒருவ
விசித்திரப் பிராணிகள்! உல
வேறு எந்தப் பகுதியிலும் கா
படமுடியாத அதிசயப் பிறவி

தமக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற அபூர்வ சிருஷ்டிகள்! உலகம் முழுதும் சாதிபேதம் கூடாது—அது புத்தர் தீட்டிய திட்டம் என்று கூறினால், இவர்கள், சாதிமுறை என்பது ஆண்டவன் வகுத்த வழி அதை அழிப்பது ஆண்டவனை அவமதிப்பது போன்றதாகும் என்பார்கள். ஒருவர் உயர்வு என்பதும் ஒருவர் தாழ்வு என்பதும் ஒருவர் மேல்சாதி என்பதும் ஒருவர் கீழ் சாதி என்பதும் ஒருவர் ஆளப் பிறந்தவர் என்பதும் ஒருவர் அடிமையாய்ச் சிதைந்து சீரழியப் பிறந்தவர் என்பதும் தவறான கொள்கைகள்—சமுதாயத்தில் காணப்படும் அவமானச் சின்னங்கள்—நாம் நாகரிகம் அடைந்தவர்கள் என்ற வாசகத்தையே பழிக்கும் கேலிக்குறிப்புகள்—அவை உடனடியாக அழித்தொழிக்கப்படவேண்டும் என்று நாம் கூறினால், இவர்கள் "கூடாது! கூடாது! சாதிகள் அழிந்தால் நம் மதமே அழிந்து விடும்; நம் சாஸ்திரங்கள் அழிந்துவிடும்; நம் நாகரிகம் அழிந்து விடும்; நம்முடைய தார்மிக தர்மம் நசித்துவிடும்; புராதன ஆச்சாரங்கள் மறைந்து விடும்; நம் ஆத்ம ஜோதி அணைந்துவிடும்; தேவாதி தேவர்களின் கோபத்துக்கு நாம் ஆளாவோம்" என்று பேத உரை பேசுவார்கள். பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்ற பாகுபாடுகள் பிரம்மதேவனின் படைப்புகள் என்பதும், சூத்திரராய்ப் பிறந்தவர்கள் பிராமணர்கட்கு உழைத்து வாழவே பிறந்தவர்கள் என்பதும், பிராமணர் பிரமனின் முகத்திலே பிறந்ததால் மேலோர்—சூத்திரர் அவன் காலிலே பிறந்ததால் கீழோர் என்பதும், ஆண்டவனின் திருவுளச் சித்தம் இவ்விதம் நால்வகைச் சாதியை இந்நாட்டில் நாட்டிட வேண்டும் என்றிருக்கும்போது, இந்த சாதிகளெனும் குறுக்குச் சுவர்களை இடித்துத் தரை மட்டமாக்கி எல்லோரையும் ஒன்றாக்க முயல்வது நாஸ்திகம்; நீசத்தனம்; பஞ்சமா பாதகத்திலும் மிகக் கொடிய பாதகச் செயல் என்பதும் இந்த துரைசாமியின் முடிந்த முடிபுகள்!

**இந்த துரைசாமிகள்** என்று நன்குத் தெரிந்தவர்களைக் குறிப்பிடுவதுபோல குறிப்பிடுகிறீர்களே, யார் இவர்கள்? விளங்கவில்லையே!" என்கிறீர்களா? இதோ, விளக்கம்.

திருப்பதியில் உள்ள கீழ்த்திசைக் கலைக் கல்லூரியில், பயிலும் பார்ப்பன மாணவர்கள் சென்ற ஆண்டு முடியும் வரை தனியாக இருந்து உண்டுவந்தனர். அவர்கள், கல்லூரி விடுதியில், மற்ற பார்ப்பனரல்லாத மாணவர்களுடன் ஒன்றாக இருந்து உண்ணாமல் தனித்திருந்து உண்பதற்காக அவர்களுக்கு திருப்பதி தேவஸ்தானம் கமிட்டியாரால் **உணவு அலவன்ஸ்** தரப்பட்டு வந்தது! இந்த அநியாயத்தைக் கண்ட சென்னை அரசியலார், இந்த ஆண்டு கல்லூரி திறந்ததும், இந்த 'ஏற்றத் தாழ்வு' முறை தொலைய வேண்டும் என்றும், பார்ப்பனரல்லாத மாணவர்களுடன் பார்ப்பன மாணவர்களும் ஒன்றாகவே இருந்து உண்ணவேண்டும் என்றும் அதுதான் நியாயம் என்றும் கூறி ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளனர். இந்த உத்தரவு நேர்மையானது. நேர்மையில் நாட்டம் உடைய எவரும் மறுக்க முடியாதது. எவருக்கும் ஆத்திரமோ கோபமோ எதிர்ப்புணர்ச்சியோ வருத்தமோ தோன்ற வேண்டிய அவசியத்தைச் சிறிதும் உண்டுபண்ணாதது.

பார்ப்பன மாணவர்கள் பிற மாணவர்களுடன் சேர்ந்து உண்டால் அவர்களுடைய சாதம் சேஷப்பட்டுப்போகும், உணவு தீட்டாகிவிடும், பிறகு பிராயச்சித்தம் தேடவேண்டி நேரிடும், அவ்வளவுக்கு உயர்ந்த தெய்வீகப் பிறவிகள் அவர்கள் என்ற அற்புதமான கருத்தும், பார்ப்பனரல்லாத மாணவர்கள் ஒன்றாக இருந்து உண்பதன் மூலம் பார்ப்பன மாணவர்கள் உண்பதைப் பார்த்துவிடுவர்—பார்த்தாலே அந்த உணவு பாப உணவாக மாறிவிடும்—பார்ப்பனர் உண்பதைப் பார்ப்பதற்கே தகுதி அற்ற மாபாவிகள் அவர்கள்—ஆகவே அவர்கள் தனியாக உண்ணட்டும் என்ற பயங்கரமான கருத்தும் தனித்தனி உணவு என்ற ஏற்பாட்டில் புதைந்து கிடக்கின்றன என்பதை உணரும் எவரும், இந்தக் கருத்துகளை இளம் பிள்ளைகள் உள்ளத்திலேயே வளரவிடுவது நாட்டின் எதிர்கால வாழ்க்கையை இருண்டு போகும்படிச் செய்வதற்கான குறுக்கு வழி என்பதை அறியும் மனமும் திறமும் படைத்த எவரும், சர்க்காரின் இப் புது தாக்கீது கண்டு இன்பம் கொள்வது இயற்கை.

மனித உள்ளம் படைத்த அனைவரும் இந்த உத்திரவைப் போற்றுவார்கள்; இதுதான் சரியான முறை என்றும் கூறுவார்கள்; இந்த நல்வழியைக் கடைப்பிடித்த நம் ஆளவந்தார்களைப் பாராட்டவும் செய்வார்கள்; இதுநாள்வரை பார்ப்பனரல்லாத மாணவர்களை இழிவாக நடத்தி வந்த அநீதி இந்த உத்தரவு மூலம் துடைக்கப்படுவது கண்டு நியாயமான மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

ஆம்! ஆனால் மனிதராய்ப் பிறந்தும் மனித உள்ளம் படைக்கப் பெறாமல் மிருக உள்ளம் வாய்த்தவர்களும் உலகிலே இருக்கிறார்கள்—அவர்களுக்கு இந்த உத்தரவு இனிக்காது; கசக்கும்! குமட்டும்! குளறுமொழிகளைக் கொட்டச் செய்யும்!

ஐயம் இருப்பவர்கள் சென்னை மெயில் பத்திரிகையின் மே 28ந் தேதி இதழைப் புரட்டிப் பார்க்கட்டும். பக்கம் 4, பத்தி 7ல் திருப்பதியிலிருந்து **ஸ்ரீமான் டி. கே. துரைசாமி அய்யங்கார்** என்பவர் எழுதிய கடிதம் அங்கு வெளியாகி இருக்கிறது.—அதைக் காணட்டும். கடிதம் என்று சொன்னோம் அதை? தவறு! தவறு! கடிதம் அல்ல அது! பாம்பும் தேளும் நடமாடும் புற்று!

திருப்பதிக் கல்லூரியில் சமபந்தி உணவுதான் இனி உண்டு என்று சர்க்கார் விடுத்துள்ள தாக்கீது அநியாயமானதாம்! மத உரிமைகளில் தலையிட்டு அனாவசியமாக மக்கள் உள்ளத்தைப் புண்படுத்தும் தன்மை உடையதாம்! "நீங்கள் உசந்த சாதி! தனியாகவே இருந்து போஜனம் செய்யுங்க!" என்று சொல்லி திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியார் இதுவரை செய்தது போலவே இனியும் பார்ப்பன மாணவர்கட்கு (அப்படி தனியாக இருந்து சாப்பிட்டு திராவிட மாணவர்களை இழிந்த சாதியினர் என்று அவமானப்படுத்துவதற்காக) பண உதவி செய்துவரவேண்டுமாம்! சர்க்கார் உடனே தங்கள் உத்தரவை மாற்றியாக வேண்டுமாம் பார்ப்பன மாணவர்கள் பார்ப்பன

(9-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

குகள்போன்ற பல்வரிசை சிறிது வெளித்தெரிய அவள் புன்னகை பூத்ததும்—ஒருகாட்சி! மரணப் படுக்கையிலிருந்த மனோரமாவின் மெலிந்த தோல்போர்த்த எலும்புக்கூடு, அழகற்ற கண்ணங்கள், ஏதேதோ பிதற்றும் வாய், காய்ந்த உதடுகள், பஞ்சடைந்த கண்கள், வாயினின்று ஒழுகிய நீர், பிணம்—இது மற்றொரு காட்சி! இந்த இரண்டு காட்சிகளும் தூங்கினால் கனவாகவும், விழித்தால் நினைவாகவும் மாறிமாறி அவனை வாட்டி வந்தன.

இந்த மனநிலையில் இன்னொருத்தியை மணந்துகொள்ள எப்படி இசைவான் அவன்?

"ஏன் என்னை மறுமணம் செய்து கொள்ளும்படித் தொந்தரவு செய்கிறீர்கள்? மனோரமா இறந்தாள்—அவளோடே என் உள்ளத்திலிருந்த பெண்ணாசையும் இறந்துவிட்டது!" என்று மறுமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துபவர்களிடம், வருத்தமான குரலில் பதிலளிப்பான் சிவன்.

"கட்டுள்ள உடலா, மற்றொருத்தியைக் கட்டிக்கொள்ள! அதுவுமில்லையே! காசநோயின் காரணமாக, உடலும் அல்லவா கரைந்து கொண்டே வருகிறது. செல்லரித்து உளுத்துக் கொண்டேவரும் மரம் போலாகிவிட்டதே என் உடல்!........." இப்படி எண்ணி பெருமூச்செறிவான்.

காலமென்ற மரத்திலிருந்து நாட்களென்ற சருகுகள் உதிர்ந்து கொண்டே இருந்தன. ஒரு நாள் தாயாரம்மாள் சிவனின் அறையினுள் வந்தாள். படுத்திருந்த சிவன் எழுந்து உட்கார்ந்தான்.

"சிவா!"

"ஏனம்மா?"

"நான் சொல்வதை நீ கவனிக்காமலேயே இருந்தாய், பிறகு எப்படித்தான்......."

"நான் தான் வேண்டாம், வேண்டாமென்றுகூறுகிறேனே, என்னை ஏன் அம்மா தொந்தரவு செய்கிறீர்கள்?"

"சிவா!"

"என்னைத் துன்புறுத்தாதீர்கள் அம்மா!"

"அப்பா! வாழையடி வாழையாக வந்ததடா நம் குடும்பம். யோசித்துப்பார், உன்பெயரைச் சொல்ல ஒரு குழந்தை வேண்டாமா? பழமையான நம் குடும்பம் உன்னுடனேயே முடிந்துவிடவேண்டுமா? நினைத்தாலும் என் நெஞ்சம் நிலை தடுமாறுகிறதே!...சிவா! என் கண்ணே! உன் தந்தை இறந்தாரே, அப்போதே நானும் இறந்திருக்கக் கூடாதா! இந்தத் தள்ளாத வயதிலே தாங்கமுடியாத இவ்வளவு பெரிய துக்கம் வரவேண்டுமா? சிவா, சாந்தியோடு நான் சாவது உனக்கும் சம்மதமில்லையா?..... பாலூட்டித் தாலாட்டி வளர்த்த என் வயிற்றில் பால் வார்ப்பாய் என்று தானே நம்பினேன். நீ, என் பெற்ற வயிற்றில் சோகத்தீ ஏற்றுகிறாயே, ஏற்றதா இது? திடீர் அதிர்ச்சியினால் பலர் செத்ததாகச் செய்திகள் படிப்பாயே, நான் ஏன் அப்படி இன்னும் சாகாமலிருக்கிறேன்......"

"போதும், போதும் அம்மா! என் கவலையை இன்னும் அதிகமாக்காதீர். அம்மா, தாங்கள் நன்றாகப்படித்தவர்கள், யோசித்துப்பாருங்கள். காசநோயால் என் உடல் இளைத்துக் கொண்டே வருகிறதே, இந்த நிலைமையில் வேறொரு இளம் பெண்ணை மணந்து அவளது வாழ்க்கையைப் பாழாக்கவேண்டுமா?"

"சிவா! கவலையால் உன் உடல் இளைக்கிறது. அதற்குக் காசநோயும் உடந்தையாக இருக்கிறது. மனக் கவலை நீங்கினால், உடலில் உரமேறும், காசநோயின் பலமும் குறையும். நல்ல வைத்தியம் செய்தால் காசநோய் தானாகப் போய்விடும். பிறகு நீ பழையபடி நல்ல நிலைக்கு வந்துவிடுவாய்!"

"கவலை தீர்ந்தால்தானே?"

"அதற்குத்தானே கல்யாணம் செய்து கொள்ளும்படி சொல்வது. மனைவி வந்தால் காலப்போக்கில் உள்ளத்திலிருக்கும் கவலை தானாகவே மறைந்துவிடும். பிறகு சிறிது சிறிதாக மகிழ்ச்சியும் பிறக்கும். இப்படியாக முன்போலவே நீ பழைய சிவனாக மாறிவிடுவாயடா!"

"அம்மா! எனக்கென்னமோ மறுமணமென்றாலே வெறுப்பாகத்தானிருக்கிறது!"

"கண்ணே! சிவா! எந்த உதிரத்தில் நீ தோன்றினாயோ, எந்த உதிரம் பாலாக மாறி உன்னை வளர்த்ததோ, அதே இரத்தம் கண்ணீராய் மாறி உன் எதிரே சிந்துகிறதே.......கண்ணில்லையா உனக்கு! கல்லா உன் மனம்?"

"அம்மா! அம்மா! போதும் போதும் என்னை மேலும் வாட்

எதிர்பாருங்கள்! விரைவில் வெளிவருகிறது!

புரட்சிமுழக்கம்! புதுமைவிளக்கம்!

எரிமலை வார வெளியீடு

ஆசிரியர்:
A. K. வேலன்

விலை ஒரு அணா — விற்பனையாளர் தேவை

நிபந்தனைகட்கு எழுதவும்

விபரங்கட்கு:

செந்தமிழ்ப் பாசறை

கரந்தை — தஞ்சை

டாதீர். வயது சென்ற தங்களை வருத்தத்திற் குள்ளாக்கினேனே! அம்மா......'' என்று கூறிக்கொண்டே தன் அன்னையின் பாதங்களில் விழுந்து தேம்பித் தேம்பி அழுதான்! தாயும் அழுதாள், தனயனும் அழுதான்.

தாயாரம்மாள் மகனின் கண்ணீரைத் துடைத்துத் தேறுதல் கூறினாள்! அவளும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மேலும் பேச ஆரம்பித்தாள்.

''அப்பா! சென்றதை எல்லாம் மறந்து விடு. இனியாகிலும் நல்லபடி இரு. இப்பொழுதாகிலும் கூறு, மணம் செய்து கொள்ளுகிறேனென்று! ஏன், சிவா, இன்னுமா பிடிவாதம்? யோசித்துப்பார்!.............வாய் திறந்து பேசடா கண்ணே!'' என்று கூறியதும் திரும்பவும் அவள் கண்களில் நீர் நிறைந்தது.

தன் தாய் மேலும் அழுவதைக் கண்டு சகிக்க முடியாதவனாய், ''சரி அம்மா!'' என்று பதிலளித்தான். திடீரென்று அவன் முகம் மாறிவிட்டது. அவன் வாய் ''கண்ணே, மனோரமா'', என்று முணுமுணுத்தது.

''சரி அம்மா!'' என்ற சொற்கள், அவளுக்கு இவ்வளவு தான் மகிழ்ச்சியைத் தந்தன என்பதைக் கூறவே முடியாது. அவள் இதயத்தில் மாண்டவன் மீண்டது போன்ற ஓர் இன்ப உணர்ச்சி உண்டாயிற்று.

(தொடரும்)

---

## இந்த துரைசாமிகள்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

...லாத மாணவர்களுடன் ஒன்றாக இருந்து உண்ணவேண்டியதுதான் என்று சர்க்கார் கட்டாயப் படுத்துவார்களானால், அப்போது கல்லூரியை விட்டே வெளியேறிவிடுவார்களாம் பார்ப்பன மாணவர்கள்! ஆகவே சர்க்கார் தாராள மனப்பாவம் காட்டி, 'பெரிய மனது' வைத்து, கல்லூரி விடுதியில் ஒன்றாக இருந்து உண்ண விரும்பாத பார்ப்பன மாணவர்கட்குத் தனித்து உண்ணும் வசதி செய்துதான் தீரவேண்டுமாம்! ஒன்றாக இருந்து உண்பது பார்ப்பனர்களின் மத தர்மத்திற்கே மாறுபட்டதாம்! சொல்கிறார் துரைசாமி அய்யங்கார், கூச்சமின்றி! அந்த வேதவாக்கியத்தை வெளியிடுகிறது மெயில், வெட்கமின்றி; ஒன்றரை லட்சம் மக்கள் கூடிய தூத்துக்குடி மாநாட்டைப் பற்றி ஒன்றரை வரிகூட வெளியிடாத, ஆரியரால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட, இந்த மாஜி வெள்ளையர் ஏடு, **துரைசாமி** அய்யங்காரின் துடுக்கு மொழிகளுக்குத் தந்துள்ள இடம் 30 வரிகள்! **மெயிலுக்கேற்ற அய்யங்கார்! அய்யங்காருக்கேற்ற மெயில்! சரியான ஜோடி! பொருத்தமான இணைப்பு!**

சாதி பேதம் இருக்கவேண்டும் என்று பேசுவதே பித்தர் செயல் என்று நல்லறிவாளர் அனைவரும் உரைத்திடும் இந்நாளில், இதோ ஒரு துரைசாமி அய்யங்கார், சாதி பேதம் இருக்கவேண்டும் என்று பேசுவது மட்டுமல்ல, முகத்தில் உதித்தது ஒரு சாதி—அது மேல் சாதி, பாதத்தில் பிறந்தது ஒரு சாதி—அது கீழ் சாதி என்று மேல்—கீழ் சாதி வாதம் புரிவது மட்டுமல்ல, அந்த மேல் சாதி இந்த கீழ் சாதியாரோடு உடன் உண்பது பாவம், மதத் தத்துவத்திற்கே மாறு, நாஸ்திகம் என்று எழுதுகிறாரே, எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் இவருக்கு.

தென்னாப்பிரிக்காவிலே, மார்ஷல் ஸ்மட்ஸ்களும் டாக்டர் மாலான்களும் வெள்ளை நிறம் உயர்ந்தது கருப்பு நிறம் தாழ்ந்தது என்று திமிர்வாதம் செய்கிறார்கள். இங்கோ **இந்த துரைசாமிகள்**, ஆரியர் உயர்ந்தவர், திராவிடர் தாழ்ந்தவர் என்ற பேதபுத்தியை வளர்க்கிறார்கள். துரைசாமிகளின் ஆப்ரிக்க பதிப்பு மாலான்கள்! டாக்டர் மாலான்களின் தென் இந்தியப் பதிப்பு இந்த துரைசாமிகள்!

மனித சமுதாயம் முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்ல வேண்டுமானால் மனித சமுதாயத்தை விட்டு துரைசாமிகள் கல்லியெறியப்பட வேண்டும். ஆம்! **இந்திய துரைசாமிகள் மட்டுமல்ல, ஆப்ரிக்க துரைசாமிகள் கூடத்தான்!**

---

## கடிதம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தியாக செய்தி தந்திருந்தது. காங்கிரசைக் கண்டித்ததுவும் அதில் இருந்தது. பாரததேவிக்கு ஒரு பக்கமே போதவில்லை. இதன் பெயர் வகுப்புவாதம் தானா? அல்லது வேறு பெயர், தேசியம் என்று வைத்துள்ளீரா?

கடிதம் கொஞ்சம் நீண்டுவிட்டது. உண்மை விளக்கம் தானே இது. சுடுசொற்கள் இருப்பின் மன்னிப்பீர். நாங்கள் உண்மைக்காக, நேர்மைக்காக, பாட்டாளி மக்களின் நன்மைக்காக உழைப்பவர்கள் என்று கண்டு எங்களுடன் சேர்ந்து பணி செய்ய வாரீர். இன்னும் இருக்கும் ஐயப்பாடுகளையும் நீக்கிக்கொள்ள ''தூத்துக்குடி'' உள்ளது. நாம் இருவரும் அங்குப் போகலாம். வருகிறீர்களா?

தங்கள் நலம் விழையும்
நண்பன்,
**மணிவண்ணன்.**

**குறிப்பு:** என்னுடைய கருப்புச் சட்டையும் உங்களுக்குப் பிடிக்கும். ஒரே அளவுதான். என்னிடம் இரண்டு சட்டைகள் உள்ளன. நீங்களும் ஒன்று போட்டுக் கொள்ளலாம். அவசியம் வாருங்கள்.

**ஆசிரியர் குறிப்பு:** இக்தக் கடிதம் உண்மைக் கடிதம். ஆனால் இதை எழுதியவருடையவும் பெற்றவருடையவும் உண்மைப் பெயர்கள் மணிவண்ணன், கோபால கிருஷ்ணன் என்பன அல்ல. அவர்களுடைய உண்மைப் பெயர்கள் வேறு.

---

## ஏஜண்டுத் தோழர்கட்கு!

சென்ற வாரம் அனுப்பிய பில்லுக்கு இன்னும் சிலர் தொகை அனுப்பாமலே உள்ளனர். அடுத்த புதன் கிழமைக்குள் பாக்கித் தொகையை முழுவதும் அனுப்பித் தராத ஏஜண்டுகளுக்கு, அடுத்த இதழ் எத்தகைய முன் அறிவிப்புமின்றி நிறுத்தப்படும்.

அலுவலாளர்,
போர்வாள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுங்கோலன் வெலிங்டன் காலத்திலும் இல்லாத சட்டங்கள், அடக்குமுறை தர்பார் வீரர் பிரகாசம் காலத்திலும் இல்லாத சட்டங்கள், இன்று, சமாதான காலத்தில், போர்வாடையும் வீசாத காலத்தில், பிரிட்டானிய ஆட்சி மாண்டு மறைந்துபோன இந்தக் காலத்தில், எதிர்க் கட்சிகள் எதுவும் எத்தகைய எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபடாத இக் காலத்தில் ஏன் பிறப்பிக்கப்பட வேண்டும்? இந்த நாட்டிலே உலவும் யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் எந்த நீதி மன்றத்திற்கும் போகாமல், எத்தகைய சிறு விசாரணையும் இல்லாமல், எவருக்கும் சொல்லாமல், காவலில் வைக்கலாம் — அத்தகைய அநீதியை எதிர்த்து 'அப்பீல்' செய்யும் உரிமையும் எவருக்கும் கிடையாது என்றால் ஜன நாயகம் மரணப் படுக்கையில் இருக்கிறது என்பது தவிர வேறு என்ன பொருள் இதற்கு? "கம்யூனிஸ்டுகள் கலவரங்களைத் தூண்டிவிடுகிறார்கள்—அவர்களை அடக்கவேண்டும்" என்ற ஒரே ஒரு வாசகம் இவ்வளவு மகத்தான அடக்குமுறைகளுக்கும் தக்க சமாதானம் ஆகிவிடுமா? சர்க்கார், நாட்டிலே தங்கள் கட்சி ஒன்று தவிர வேறு ஏதும் இருக்கக் கூடாது, இருந்தால் அவற்றை ஒழித்துக்கட்டுவதே தம் முதல் வேலை என்று முடிவுகட்டிவிட்டார்கள் என்பதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டிற்குப் பதில், இந்த அவசரச் சட்டமா? அப்படித்தான், அடக்குமுறைகளின் மூலம் மாற்றுக் கட்சிகளை மடக்கி விட முடியுமா? முடியும் என்று உலக வரலாறு என்றேனும் கூறியதுண்டா? அடக்க அடக்க எதிர்ப்பு ஓங்கி எழும் என்பதை காங்கிரஸ் கட்சியின் பழைய வரலாறே கூறுமே! திராவிடர் கழகத்தின் மீது நேற்று பாணம் தொடுக்கப்பட்டது, சோஷலிஸ்ட் கட்சியின் மீது முந்தா நாள் ஈட்டி எறியப் பட்டது, இன்று கம்யூனிஸ்ட் கட்சிமீது தாக்குதல் என்றால் இதன் பொருள் கலவரத்தை அடக்குவதா அல்லது எதிர்க் கட்சிகளை ஒழிப்பது என்பதா?

அதிகம் கூறவேண்டுவதில்லை. ஜனநாயகம் இன்று இந்நாட்டில் குற்றுயிராய்க் கிடக்கிறது. இது உண்மையா அல்லவா என்பது இன்றைய பிரச்சினை அல்ல—இது உண்மை அல்ல என்று எவரும்கூற முடியாது—இதற்குப் பரிகாரம் தேடுவது எப்படி என்பதுதான் இன்றைய பிரச்சினை.

நாட்டிலே உள்ள முற்போக்குக் கட்சிகள் அத்தனையும், இடதுசாரிக் கட்சிகள் அத்தனையும், காங்கிரஸ் சர்க்காரின் பாசீசப் போக்குக்கு மாறுபட்ட இயக்கங்கள் அத்தனையும், இந்த ஒரு துறையில் ஒன்று பட்டு நின்று, மக்கள் உரிமைக்கு ஏற்பட்டுள்ள இந்தப்புதிய பேராபத்தைக் களைந்தெறிய வேண்டும்! **பாரததேவி** என்ற மாஜி தேசிய ஏடு கூறியிருப்பதுபோல, **"ஜனங்களை இப்படி மாடு மிருகங்களைப்போல நினைத்து நடப்பதற்கு எந்த சர்க்காருக்கும் உரிமைகிடையாது"** என்பதை நாட்டின் நல்வாழ்க்கையிலும் ஜனநாயகத்தின் வளர்ச்சியிலும் அக்கறைஉடைய ஒவ்வொருவரும், ஒவ்வொரு கட்சியும் அழுத்தந் திருத்தமாகக் கூறித்தான் ஆகவேண்டும். திராவிடர் கழகம் ஏற்கெனவே இந்தப் பணியைச் செய்து கொண்டு வருகிறது. மற்ற இடது சாரிக் கட்சிகளும் உடன் நின்று பணியாற்ற வேண்டும். ஆற்றுமா?

**வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!**

# தமிழன் தொடுத்த போர்!

## இந்தி எதிர்ப்பு இயக்க வரலாறு

★

ஆசிரியர் :
**மா. இளஞ்செழியன், B. A. (HONS)**

★

"இந்தப் புத்தகம், இதைப் படித்துப் பார்க்கிறவர்களுக்கு, இந்தி எதிர்ப்புப் போரைப் போல் உடனே ஒரு போராட்டம் ஏற்படாதா, நமக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்காதா என்கின்ற ஒரு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் உண்டு பண்ணத்தக்கதாக இருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், எனக்கே, இப்புத்தகத்தைக் கொஞ்சம் பார்த்த அளவிற்கே இந்தி எதிர்ப்புப் போன்றதான—ஏன்—அதைவிட முக்கியமான காரியங்களுக்கும் போராட வேண்டியது இன்றியமையாததாகக் காணப்படும் இக் காலத்தில் நாம் ஏன் சும்மா இருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது."

—பெரியார்

"இந்த வரலாற்றினை, என் நண்பர் இளஞ்செழியன், உணர்ச்சி ஊட்டக்கூடிய முறையில் இனிமையும் பயனும் உள்ள முறையில் தீட்டியுள்ளார். இந் நூலின் மூலம் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் நண்பர் நற்றொண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழரின் இல்லந்தோறும் இந் நூல் இருந்து, உள்ளந்தோறும் உணர்ச்சியை ஊட்டி, நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப்போர் புரியும் ஆற்றலைத் தருமாக! தரும்—நிச்சயம்! தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்."

—அண்ணா

★

240 பக்கங்கள் மிகவும் குறைந்த விலை

**விலை ரூ. 1 12 0 தபாலில் ரூ. 2 0 0**

★

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு சென்னை 1.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த ஓர் உருவத்தைப் பிடித்தவக்கு, அவ்வுருவம் இன்னதெனத் தரியும் வரை—பயம் எழுவது யல்புதானே?

இங்கிலேயிலும் தெசுலியேர், ன் இரு கைகளிலும் ஒன்றை த்து அதன் உருவத்தைத் தொட் ப் பார்க்கலாமென எண்ணினுள். ப்படி ஒரு கையை எடுத்தால், வ்வுருவம் பிடுங்கிக்கொண்டு ஓடி மோ என்ற பயத்தினுல், டித்த பிடியை விடாமலேயே ருந்தாள், என்ன செய்வது?

உடனே தெசுலியேர் "ஓடி ருங்கள்! ஓடி வாருங்கள்!! தோ பேயின் காதுகளைப் பிடித் க்கொண்டேன்" என்று கூவி ள். அவள் கூச்சல் யாருக்கும் ட்கவில்லை. அப்படிக் கேட் ந்தாலும் வருவதற்கு யாரும் யாராகவும் இல்லை.

தனது கூக்குரலுக்கு யாரும் ாததைக் கண்ட பயமேலீட்டால் க்கக் கத்தினுள்! அலறினுள்!! றினுள்!!!

உருவமோ கதவின் பக்கமாக க்கிறது! இவள் பிடித்த யை மட்டும் விடாமல், கத்திக் ண்டே இருந்தாள். இக் கூக் லைக் கேட்ட இவள் நேசியும், னும் சிலரும் ஓடி வந்தார்கள்.

....." என்ன! உனக்குப் பய ிருக்கிறதா? சொல்!" என்று த்தில் நின்றுகொண்டே கேட் ் நேசி.

....." வா வா! பேய் ஓடிவிடும் லிருக்கிறது" என்ருள் தெசு ர்.

சியும், அவளோடு வந்த சில கிட்ட நெருங்க எத்தனித்தார் அச் சமயம் அந்த உருவம் மியதால், அவர்கள் பயந்து வாங்க முயற்சித்தார்கள். யறிந்த தெசுலியேர், ளிச்சத்தையாவது இங்குக் ங்கள்" என்ருள்.

ர்கள் தூரத்தில் நின்றபடியே ிச்சத்தைக் காட்டினுர்கள் ச்சம் அந்த உருவத்தின்மீது த்தும், தெசுலியேர் கடகட ச் சிரித்துவிட்டாள். மற்றவர் குலுங்கக் குலுங்க நகைக்கத் ங்கிவிட்டனர். ஏனெனில் ளவு பயத்தையும், பீதியை ண்டுபண்ணிய அந்த உரு ெரிய வேட்டை நாய்!

அந்த நாய், பிரேனே (Pyrineis) மலைப்பிரதேசத்து நாய். மிகச் சாதுவானது. அதற்கு வெளியில் படுத்துக்கொள்ள விருப்பமில்லாத படியால், திருட்டுத்தனமாக இவ் வீட்டினுள் வந்து படுத்துக்கொள்வது வழக்கம். (இவ் வீட்டுக் கதவுக்குப் பூட்டும் கிடையாது; தாழ்ப்பாளும் கிடையாது.)

அந்த நாய் எவ்வளவு சாதுவானது என்ருல், தான் குற்றத்திலகப்பட்டும் தன்னை விடுவித்துக்கொண்டோடவோ, அல்லது உறுமவோ செய்யாமல் மௌனமாகவே இருந்தது. வெளிச்சத்தின் உதவியால் இத்தகைய "பேயை"க் கண்டதும் எல்லோரும் கலீரெனச் சிரித்தார்கள்!

அப்போது தெசுலியேர் வந்திருந்தவர்களைப் பார்த்து, "நான் இந்தப் பேயுடனேயே இங்கு இன்றிரவைக் கழிக்கின்றேன்; நீங்கள் போங்கள்" என்று வந்தனங் கூறி அனுப்பிவிட்டு, மறுபடியும் அந்நாயைத் துணையாக வைத்துக்கொண்டே தனது கட்டிலில் படுத்துச் சுகமாக நித்திரை செய்தாள்.

. பொழுது புலர்ந்தது. இச் செய்தியைக் கேட்ட கிராமவாசிகள் பலரும் ஆச்சரியத்தோடு, தெசுலியேர் இருக்கும் வீட்டினுள் நுழைந்தார்கள். தெசுலியேர் அவர்களையெல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று சொல்லிவிட்டுத் தனது நேசியுடன் வீடு சென்ருள் என என் தாயார் தனது கதையை முடித்தார். பிறகு டாக்டர் தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

[அது அடுத்த இதழில்]

---


## போர்வாள்

சந்தா விபரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்படி | 0-1-6 | 0-2-0 |
| ஆண்டுத் தொகை | 5-0-0 | 6-8-0 |

★

147, பவழக்காரத் தெரு, சென்னை.


# மதிப்புரை

## வீராயி

[ஆசிரியர்: தமிழ் ஒளி. விலை 1-4-0. தமிழர் பதிப்பகம், 81. லிங்க செட்டித் தெரு, சென்னை.]

முதலாளித்துவம், வர்ணுஸ்ரமம் என்னும் இந்த இரு பெருங் கொடுமைகளையும் வெட்டிச் சாய்க்க வேண்டியது தமிழ் எழுத்தாளர் தம் முதற்கடமை. அந்தக் கடமையைக் குறைவறச் செய்து முடித்திருக்கிருர் இளைஞர் தமிழ் ஒளி இக்காவிய நூலில். உள்ளம் உருக்கும் ஒரு சிறு கதை, அந்தக் கதையைச் சுற்றி நின்று கூத்தாடும் ஏராளமான கவிதை மலர்கள், அந்த மலர்களில் எல்லாம் சிறந்த இலட்சியங்கள் என்னும் இன்பத் தேனின் பெருக்கம்—இதுதான் "வீராயி". "வீராயி"யில் உள்ள கவிதைகளிற் சில கொம்புத்தேன் என இனிக்கின்றன; சில நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார அடிகள் எனச் சுவை பயக்கின்றன; சில புரட்சி முரசுகள் என ஒலிக்கின்றன. ஆனல் அனைத்தும் நம் உள்ளத்தைத் தொட்டிழுக்கின்றன—இன்பக் கேணியிற் குதித்திட அல்ல, சமுதாயப் புரட்சிதனைத் துவக்கிட! அதுதானே நமக்குத் தேவை! "வீராயி," ஒரு சிறந்த காவியம் என்பதை காவியத்தின் உண்மைப் பண்பறிந்த எவரும் மறுக்க முடியாது.

## தாய் நாட்டின் நலிவு

[ஆக்கம்:—சாவண்ணு தேவராசன். விலை 0-3-0 இலக்குமி நூல் பதிப்பகம். திருவத்திபுரம் வ. ஆ.]

எளிய நடையும், இனிய போக்கும், தெளிவான கருத்தும், தன்மான எழிலும் ததும்பும் கவிதைகள் பல நிறைந்த சிறு நூல். சுயமரியாதைஞரணத்தைத் தமிழ்த்தேனில் குழைத்துத் தருகிருர் தேவராசன். தமிழகத்தின் நலிவு தீர தமிழர் இத்தகைய ஞரணங்களை அருந்தித்தான் ஆகவேண்டும்.

---




தொடர்கதை:

கற்சிலையைப் போல் நின்றிருந்த சிவனுக்கு வையாபுரி ஆறுதல் மொழிகள் பல கூறினர். அவர் தேற்றத் தேற்ற சிவன் குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழுதான்.

மனோரமா சோலையூருக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். தாயாரம்மாள், தன் மருமகளுக்கு உயிர்ப் பிச்சை தரும்படி உள்ளூர் வெளியூர் கடவுள்களை எல்லாம் வேண்டிக் கொண்டாள். மகன் பேச்சையும் கேட்காமல் கோயில்களுக்கு விதவிதமான அபிஷேகங்களைச் செய்தாள். கடவுள் கண் திறந்தார்! ஊரை அடைந்த ஆறும் நாள் மனோரமா ஆவி நீத்தாள்!

"கண்ணே மனோரமா!" என்று கண்ணீர் சிந்தி, கதறிக் கதறி அழுதான் சிவன். பலர் எவ்வளவோ தேற்றியும் அவன் மனம் சமாதானம் அடையவில்லை. அவளிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவனால் அவ்வளவு சுலபத்தில் துக்கத்தைத் துடைத்துக் கொள்ளமுடியுமா?

யாருமே இல்லாத தனி இடத்தில் உட்கார்ந்து கொண்டு சிவன், தாங்க முடியாத கவலையினால், வாய்விட்டுக் கதறி அழுதான்.

"கண்ணே! மனோரமா! நீ இன்றி இனி நான் எப்படி வாழ்வேன்? உன்னைப் பிரிந்து வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? வண்ண மயில் போல் அன்று ஏன் என் கண்முன் தோன்றி ஆடினாய்? மணந்த என்னைத் தவிக்க விட்டு திடீரென்று மயானம் செல்லத் தானா என் கண்ணையும் நெஞ்சையும் அன்று கவர்ந்தாய்?

குளத்திற்கழகு, தாமரை மலர்ந்திருப்பது என்பது உண்மைதான். ஆனால் மலர்ந்த தாமரை, எருமையின கால்களால் மிதியுண்டு சேற்றில் புதைந்து அழுகுவதைவிட, மலராமலே இருந்திருந்தால் அதனால் குளத்திற்கு ஏதாகிலும் நஷ்டமா? வாழ்விற்கு இன்பம் காதல்! மறுப்பார் இல்லை! ஆனால் தோன்றிய காதல் இப்படிக் கருகிவிடுவதைவிட, காதலே பிறக்காமல் இருந்திருந்தால் இன்பமும் துன்பமும் ஏது? மனோரமாவை கைபற்றிய போது எவ்வளவு களிப்புக்கொண்டேன். ஆனால் இன்று............" இப்படிப் பற்பல கூறிப் புலம்பினான். மனப் புயலில் சிக்கிய மனிதப் பட்டாளன்! அவன் உள்ளத்தில் துன்பப் புயல் ஓயாது ஒழியாது வீசிக்கொண்டே இருந்தது!

மாதங்கள் பல சென்றன. சிவனுக்கு இன்பம் தந்த மனோரமா தான் சாகும் முன்னரே, அவனுக்குத் தீராத் துன்பத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றாள். அன்பின் மிகுதியினால் அவளைப் பிடித்திருந்த காசநோயையும் பொருட்படுத்தாது, தானே எந்நேரமும் அவளருகில் இருந்து, அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டிருந்ததினால், அந்நோய் சிவனையும் பற்றிக்கொண்டது!

மனக் கவலையினால் நாளுக்கு நாள் அவன் உடலின் உரம் குறைந்து வரவே, காசநோய் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது. நாளாக நாளாக வளர்ந்த காசநோய் வேலை செய்யவும் தொடங்கியது. நலம் குறைந்த உடலில்தானே காச நோய் நன்றாக வேலை செய்யும்!

தன் மகனின் நிலையைக் கண்ட தாயாரம்மாள் கண்களில் இரத்தக் கண்ணீர் கசிந்தாள். தன் ஒரே மகனுக்கு மறுமணம் செய்து, அவன் இன்பமாக இருப்பதைக் கண்குளிரப் பார்த்துவிட்டு, தான் கண்மூட வேண்டுமென்று அவள் ஆசைப் பட்டாள்.

மறுமணம் என்றாலே சீறி விழுவான் சிவன். கல்யாணப் பேச்சைக் கேட்டதும் சிவனின் அகக்கண் முன்பு அ... கும் அகோரமும் நிறைந்த இரண்டு காட்சிகள் தோன்றி அவனை நிலை கலங்கச் செய்தன.

மலர்த் தோட்டத்தில் அ... மங்கையை அவன் கண்டது... காளை அனுப்பிய புதுப்பார்வையில் கன்னி கட்டுண்டது... பின் இசைந்ததும், மின்னல்கொ... போன்ற அவள் அவன் மார்பி... சாய்ந்ததும், அணைப்பும், மு... தங்களும்தந்ததும், முல்லைமொ...

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar of Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelivan B. A. (Hns